### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலினை

# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக நியமித்த - கழகத் தலைவருக்கு நன்றி!

## திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுவில் தீர்மானம்!

திருச்சி, மே. 16-

திருச்சி தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் கோவிந்தராஜ் தலைமையில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

சிறப்பு தீர்மானமாக : கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருச்சி கிழக்கு தொகுதியில் இடைத்தேர்தலில் போட்டியிட வேண்டும் என செயற்குழுவில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது .

**முக்கிய தீர்மானங்கள் :**

**தலைவருக்கு நன்றி:**

உதயநிதி ஸ்டாலின் அவர்களைச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக நியமித்ததற்காகக் கழகத் தலைவருக்கு இந்தச் செயற்குழு நன்றி தெரிவிக்கிறது.

**மகளிர் உரிமைத் தொகை:**

பெண்களுக்கான உரிமைத் தொகையை மே 15 ஆம் தேதி வங்கிக் கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, தமிழக முதல்வர் உடனடியாக அதனை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

**வாக்காளர்களுக்கு நன்றி:**

திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய மூன்று தொகுதிகளில் கழக மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களித்த மக்களுக்கு செயற்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**எதிர்க்கட்சித் தலைவருக்குப் பாராட்டு:**




சட்டமன்றத்தில் தமிழக அரசின் திட்டங்கள் குறித்தும், அளித்த வாக்குறுதிகள் (மகளிர் உரிமைத் தொகை 2500 ஆக உயர்வு, இலவசப் பேருந்து பயணம், 6 சிலிண்டர்கள் போன்றவை) குறித்தும் கேள்வி எழுப்பி, மக்கள் நம்பிக்கையைப் பெறும் வகையில் செயல்பட்ட எதிர்க்கட்சித் தலைவருக்குப் பாராட்டு மற்றும் வாழ்த்துகள் தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் மாநகரக் கழகச் செயலாளர் மு மதிவாணன், மாநிலங்கள் ளவை உறுப்பினர் கவிஞர் சல்மா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, மாவட்ட அவைத்தலைவர் கோவிந்தராஜ், மாநில அணி நிர்வாகி செந்தில் மற்றும் மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர் அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

### ஆரம்ப, நகர்ப்புற சுகாதார நிலையங்களில் பணியாற்றும்

# 40 ஆயிரம் ஒப்பந்த ஊழியர்களுக்கு உடனடியாக சம்பளம் வழங்கிடுக!



### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் வலியுறுத்தல்!

சென்னை, மே 15-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முழுவதும் தேசிய சுகாதார குழுமத்தின் திட்டங் களின் (என்.ஹெச். எம்.) கீழ், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர், செவிலியர், ஆய்வக நுட்பனர்கள், மருந்தாளுனர்கள், மருத்துவமனை பணியாளர்கள், கணினி இயக்குபவர்கள் என சுமார் 40,000 ஊழியர்கள் ஒப்பந்த முறையில் பணி செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஏப்ரல் மாத ஊதியம் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்த ஊதிய தாமதம், குறைந்த ஊதியத்தில் பணி செய்யும் இந்த ஊழியர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் வெகுவாக பாதித்துள்ளது.

எனவே, குறைந்த ஊதியத்தில் வாழும் அந்தக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியை கருத்தில் கொண்டு அவர்களுக்கான ஏப்ரல் மாத ஊதியத்தை உடனடியாக வழங்கிட தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிவிப்பு!



வேலூர், மே. 16-

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டி.எம்.கதிர்ஆனந்த் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (16.05.2026 - சனிக்கிழமை) பகல் 10.00 மணியளவில் மாவட்ட பொருளாளர் திரு.சி.நரசிம்மன் அவர்கள் தலைமையில் காட்பாடி எஸ்.ஏ.மஹால், ஆக்ஸிலியம் கல்லூரி, ரவுண்டானா அருகில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே, வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க விற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்:

1. கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 07.05.2026 அன்று நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினர் கூட்டத்தில் திமுக சட்டமன்றக் கட்சி தலைவராக உதயநிதி ஸ்டாலின் அவர்களை நியமித்தமைக்கு நன்றி தெரிவித்தல் குறித்து.

2. 14-05-2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டம் சம்மந்தமாக.

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புழல் எம். ஜெயபால்
### மே 16 (2013)



திருவள்ளூர் மாவட்டம், புழல் ஒன்றியம், செங்குன்றம் பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்ட தோழர்களில் இவரும் ஒருவர்.

கல்லூரியில் படிக்கும் காலந்தொட்டு தி.மு.க. மாணவர் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றியவர்.

புழல் ஒன்றிய பெருந்தலைவராகவும், மாநில பெருந்தலைவர்கள் மன்ற செயலாளராகவும், சைதை தாலுக்கா வேளாண் விளைபொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கத் தலைவராகவும் சிறப்புற பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்ட துணைச் செயலாளராகவும், மாவட்ட இலக்கிய அணி புரவலராகவும், பொதுக்குழு உறுப்பினராக இருமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# நெல்லை சட்டமன்றத் தொகுதியில் நன்றி அறிவிப்புக் கூட்டம்!

### நெல்லை மேற்கு மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை, மே.16 -

நெல்லை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக போட்டியிட்ட நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் 9 இடங்களில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் நடைபெறுகிறது.என அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக துணை பொதுச் செயலாளர்,கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் ஆலோசனைப்படி, நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. அறிவித்தலின்படி

நெல்லை சட்டமன்றத் தொகுதியில் எனக்கு வாக்களித்த வாக்காளர்கள் தி.மு.க.தொண்டர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டங்கள் 9 இடங்களில் நடைபெறுகிறது.

அதன்படி நாளை (மே 17 ஆம் தேதி) மாலை 6 மணிக்கு டவுண் சந்திப்பிள்ளையார் கோவில் அருகிலும்,இரவு 730 மணிக்கு ராமையன்பட்டியிலும்,(18 ஆம் தேதி) மாலை 6 மணிக்கு மானூர் ஒன்றிய அலுவலகம் அருகிலும் இரவு 7 மணிக்கு தச்சநல்லூர் அண்ணா சிலை அருகிலும், (19 ம் தேதி) மாலை 6 மணிக்கு பேட்டை மீனாட்சி தியேட்டர் அதிலும், இரவு 730 மணிக்கு சுத்தமல்லி கோபால சமுத்திரம் சாலையிலும்,(20ம் தேதி) மாலை 6 மணிக்கு தாழையூத்து 9 ம் நம்பர் பேருந்து நிறுத்தம் பகுதியிலும்,இரவு 730 மணிக்கு சங்கர்நகர் மின்வாரிய அலுவலகம் அருகிலும்,(21 ம் தேதி) கங்கைகொண்டான் பஜார் திடலிலும் நடைபெறுகிறது.

மேற்கண்ட கூட்டங்கள் மானூர் ஒன்றிய செயலாளர்கள் மாரியப்பன், அன்பழகன், அருள்மணி, பாளை வேளங்குளம் கண்ணன் ஆகியோர் தலைமையிலும், நெல்லை சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான பேச்சிபாண்டியன், அவைத் தலைவர் முருகன், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவர் டி.பி.எம். மைதீன்கான், மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ. பெருமாள், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெறுகிறது.


இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர,ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கிளை, கழக நிர்வாகிகள், சார்பு அணி களின் நிர்வாகிகள், (BLA2) (BDA) (BLC) மற்றும் கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

---

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. பொதுஉறுப்பினர்கள் கூட்டம் 17.05.2026 - ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் உத்திரமேரூர் பிரியா மகாலில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு அவர்களின் தலைமையிலும் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஓ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., திருமதி.கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர், சன்பிராண்ட் கே.ஆறுமுகம் அவர்களின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் , கழக அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள்,மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்துக்கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1) முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா

2) காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திற்கு களப்பணி ஆய்வுக்குழு வருகை சம்பந்தமாக

3) கழக ஆக்கப்பணிகள்

**க.சுந்தர்,**
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

---

### ராஜஸ்தான் மாநிலத்தில்

# நீட் தேர்வு மோசடியில் ஈடுபட்ட பா.ஜ.க. நிர்வாகி!

ஜெய்பூர், மே 15-

நாடு முழுவதும் கடந்த 3ம் தேதி நடைபெற்ற நீட் தேர்வின் போது வினாத்தாள் தேர்வு தொடங்குவதற்கு முன்பே கசிந்தது. இதனை தொடர்ந்து நீட் நுழைவுத் தேர்வை ரத்து செய்வதாக தேசிய தேர்வு முகமை அறிவித்தது. தற்போது இந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது.

இந்நிலையில், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரைச் சேர்ந்த தினேஷ் பிவால் என்ற பா.ஜ.க. இளைஞர் அணி நிர்வாகியை சிபிஐ கைது செய்துள்ளது. அவரிடன் நடத்தப்பட்ட விசாரணையில், 30 லட்சம் ரூபாய் கொடுத்து நீட் கேள்வித்தாளை இவர் பெற்று தனது மகனுக்கு வழங்கியதுடன், பலருக்கு விற்பனை செய்ததும் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து தினேஷ் பிவாலின் சகோதரர், அவரது மகன் என 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், நடப்பாண்டு நீட் தேர்வுக்கு முன் பா.ஜ.க. நிர்வாகி தினேஷ் பிவால் நீட் வினாக்களின் கையெழுத்து பிரதியை ஸ்கேன் செய்து தனது மகன் விகாஸுக்கு அனுப்பியதும், அதனை அவர் சிகார் நகரில் உள்ள நீட் பயிற்சி மையத்துக்கு அனுப்பியதும் தெரியவந்துள்ளது. இந்த கேள்விகள் 5 லட்சம் ரூபாய் வரை விற்கப்படுள்ளதாக கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அந்த நீட் மையத்தில் பயின்ற மாணவர்கள் ஆசிரியர்களையும் சி.பி.ஐ விசாரணை வளையத்தில் கொண்டுவந்துள்ளது. முன்னதாக நீட் தேர்வு முடிந்த உடனேயே, தேர்வு முடிவுகள் வெளியாவதற்கு முன்னரே இந்த பயிற்சி மையம் மாணவர்களை அழைத்து வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டது.

நீட் மோசடியில் கைதான பா.ஜ.க. நிர்வாகி தினேஷ் பிவால் கடந்த ஆண்டும் நீட் மோசடியில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. தினேஷ் பிவாலின் மகன், சிகார் நீட் பயிற்சி மையத்தில் "Topper" ஆக வந்துள்ளார். இவரது குடும்பத்தை சேர்ந்த 4 பேர் கடந்த ஆண்டு நீட் தேர்வில் வெற்றி பெற்றுள்ளதும் தற்போது தெரியவந்துள்ளது.

நீட் மோசடியில் கைதான பா.ஜ.க. நிர்வாகி அதிர்ச்சியூட்டும் தகவல்கள் நாடு முழுவதும் கடந்த 3ம் தேதி நடைபெற்ற நீட் தேர்வின் போது வினாத்தாள் தேர்வு தொடங்குவதற்கு முன்பே கசிந்தது நீட் நுழைவுத்தேர்வை ரத்து செய்வதாக தேசிய தேர்வு முகமை அறிவித்தது நீட் நுழைவுத் தேர்வு முறைகேடு வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது ராஜஸ்தான் மாநிலம்ஜெய்ப்பூரைச் சேர்ந்த தினேஷ் பிவால் என்ற பா.ஜ.க. இளைஞர் அணி நிர்வாகியை சிபிஐ கைது செய்துள்ளதுஅவரிடன் நடத்தப்பட்ட விசாரணையில் ரூ.30 லட்சம் கொடுத்து நீட் கேள்வித்தாளை இவர் பெற்று மகனுக்கு வழங்கியதுடன், பலருக்கும் விற்பனை தினேஷ் பிவாலின் சகோதரர்,அவரது மகன் என 5 பேர் கைது நீட் தேர்வுக்கு முன்

பா.ஜ.க. நிர்வாகி தினேஷ் பிவால் நீட் வினாக்களின் கையெழுத்து பிரதியை ஸ்கேன் செய்து மகன் விகாஸுக்கு அனுப்பியுள்ளார்

விகாஸ் சிகார் நகரில் உள்ள நீட் பயிற்சி மையத்துக்கு அதனை அனுப்பியுள்ளார்

வினாத்தாளை ரூ.5 லட்சம் வரை விற்கப்படுள்ளதாக தகவல் நீட் மையத்தில் பயின்ற மாணவர்கள் ஆசிரியர்களையும்சி.பி.ஐ விசாரணை வளையத்தில் கொண்டுவந்துள்ளது

முன்னதாக நீட் தேர்வு முடிவுகள் வெளியாவதற்கு முன்னரேஇந்த பயிற்சி மையம் மாணவர்களை அழைத்து வெற்றி கொண்டாட்டத்தில்ஈடு பட்டது

நீட் மோசடியில் கைதான பா.ஜ.க. நிர்வாகி தினேஷ் பிவால் கடந்த ஆண்டும் நீட் மோசடியில் ஈடுபட்டிருக்கலாம் எனசந்தேகம் தினேஷ் பிவாலின் மகன் சிகார் நீட் பயிற்சி மையத்தில் "Topper" ஆக வந்துள்ளார்

தினேஷ் பிவாலின் குடும்பத்தை சேர்ந்த 4 பேர் கடந்த ஆண்டுநீட் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். நீட் மோசடியில் கைதான பா.ஜ.க. நிர்வாகி தினேஷ் பிவால் பரபரப்பு தகவல் இதனிடையே, நீட் மோசடியில் கைதான பா.ஜ.க. நிர்வாகி தினேஷ் பிவால், இந்த விவகாரத்தில், பெரும் தலைகள் தப்ப வைக்கப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டி யுள்ளார். காவல்துறையினர் காரில் அழைத்துச் சென்ற போது, செய்தியாளரின் கேள்விக்கு பதிலளித்த தினேஷ் பிவால், இவ்வாறு கூறினார். இதனிடையே, பா.ஜ.க. நிர்வாகி தினேஷ் பிவால் குறிப்பிட்ட பெரும் தலைகள் யார் என்ற கேள்வியை எதிர்க்கட்சிகள் எழுப்பி வருகின்றன. நீட் மோசடியில் பெரும் தலைகள் காப்பாற்றப்பட்டுள்ளனர்

தினேஷ் பிவால் நீட் மோசடியில் பெரும் தலைகள் தப்ப வைக்கப்பட்டுள்ளனர் தினேஷ் பிவால் காவல்துறையினர் காரில் அழைத்துச் சென்ற போது, செய்தியாளரின் கேள்விக்கு தினேஷ் பிவால் பேட்டி பா.ஜ.க. நிர்வாகி தினேஷ் பிவால் குறிப்பிட்ட பெரும் தலைகள் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்ட நீர் மோர் பந்தலை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன், செஞ்சிஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், நகர் செயலாளர் கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.